பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

*08 10 2025 WEDNESDAY 6.30 PM*

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- UDAN திட்டம் விமானப் பயணத்தை எளிதாக்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- உயிரி எரிபொருள் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளதாக கூறப்படுவதை மாநில அரசு நிராகரித்துள்ளது.
- திமுக அரசுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்கள் கைது செய்யப்படுவது கண்டிக்கத்தக்கது என்று அஇஅதிமுக கூறியுள்ளது.
- ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

>>>><<<<

UDAN திட்டம் விமானப் பயணத்தை எளிதாக்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நவி மும்பை சர்வதேச விமான நிலையத்தை இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.

UDAN திட்டம் காரணமாக, மூன்றாது பெரிய உள்நாட்டு விமான போக்குவரத்து நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த திட்டம் காரணமாக, விமான நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டு 74 விமான நிலைங்கள் மட்டுமே செயல்பாட்டில் இருந்ததாகவும், தற்போது அதன் எண்ணிக்கை 160ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறைந்த செலவிலான விமானப் பயணத்தை உடான் திட்டம் உறுதி செய்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

உலகின் அதிக இளையோரைக் கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நம் நாட்டின் வலிமையே இளையோர் தான் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனை கருத்தில் கொண்டு தான் இளையோர் நலனுக்கான திட்டங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டு மக்களின் பாதுகாப்பிற்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>><<<<

உயிரி எரிபொருள் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

ஹரியானாவின் Sonipat-ல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சரக்குப் போக்குவரத்து செலவினங்களை குறைப்பதற்கு உயிரி எரிபொருள் பயன்பாடு உதவிடும் என்று கூறினார்.

விவசாயிகளின் வருவாயை பெருக்குவதற்கும் இது வகை செய்யும் என்று திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளதாக கூறப்படுவதை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் நிராகரித்துள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – மா.சு 30 செகண்ட்ஸ்)

>>>><<<<

பூம்புகாரில் 21 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகள் விரைவில் நிறைவடையும் என்று மாநில அமைச்சர் திரு. ராஜேந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

திமுக அரசுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களை கைது செய்வது கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக கூறியுள்ளது.

*இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், முன்னாள் காவல்துறை அதிகாரியும், அரசியல் விமர்சகருமான திரு. வரதராஜன் கைது செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளது.*

*இதுபோன்ற கைது நடவடிக்கைகளை திமுக அரசு கைவிட வேண்டும் என்றும் அஇஅதிமுக அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.*

*>>>><<<<*

*சிறந்த நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் விருது தமக்கு வழங்கப்பட்டுள்ளது, தமிழகத்திற்கே பெருமை என்று இவ்விருதை பெற்ற கன்னியாகுமரி விவேகானந்தர் கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் திருமதி. ஜெயக்குமாரி கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் – ஜெயக்குமாரி 60 செகண்ட்ஸ்)*

*>>>><<<<*

*கோவை, நீலகிரி உள்ளிட்ட 15 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் - செந்தாமரை 46 செகண்ட்ஸ்)*

*>>>><<<<*

*மாவட்டச் செய்திகள்*

*வேலூர் மாவட்டத்தில் இந்திய தர நிர்ணய அமைப்பின் சார்பில் நடைபெற்ற மாநாட்டை ஆட்சியர் திருமதி. சுப்புலெட்சுமி இன்று தொடங்கி வைத்தார்.*

*>>>><<<<*

*நாமக்கல் மாவட்டத்தில் உள்ள உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி இன்று ஆய்வு மேற்கொண்டார்.*

*>>>><<<<*

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகளில் கல்வி உரிமை சட்டத்தின் கீழ், LKG மாணவர் சேர்க்கைக்கு வரும் 17ஆம் தேதி முதல் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.*

*>>>><<<<*

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

Mackay-ல் நடைபெற்ற இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று, 7 விக்கெட் இழப்புக்கு 144 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இந்தியா, 171 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனையடுத்து, 2வது இன்னிங்ஸை ஆடிய ஆஸ்திரேலியா 116 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பின்னர், 81 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா, 3 விக்கெட் இழப்புக்கு 84 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை, இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இந்தியா கைப்பற்றியது.

>>>><<<<

உலக ஜூனியர் கலப்புக் குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸை வென்றது.

>>>><<<<

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஆல்ரவுண்டர் பிரிவில் இந்தியாவின் ஜடேஜா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். வாஷிங்டன் சுந்தர் 11வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

சிட்னி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மோகன் குமார் - ரிது வர்ஷினி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>END<<<<